Registered asa News paper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

| ஈழநாடு சந்தா விபரம் | | |
|---|---|---|
| இந்தியா — இலங்கை | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-35 |

போன் 389 National Tamil Daily தபால் பெட்டி எண் 12

மலர் 5 யாழ்ப்பாணம் சோபகிருது தை 17 ஆம் நாள் றம்ளான் 14 (30-1-64) வியாழக்கிழமை இதழ் 303

# "காஷ்மீர் பிரச்னையை அமைதியாக தீர்த்துக் கொள்க"

## பாகிஸ்தானுக்கு ரஷ்யா தெரிவிக்கும் யோசனை

மாஸ்கோ, ஜன. 29

**பாகிஸ்தானின் பழைய புதிய நட்பு நாடுகளின் குறுக்கீடின்றி, இந்தியாவுடன் காஷ்மீர் பிரச்னையை சமாதான முறையில் அமைதியாகத் தீர்த்துக் கொள்ளுமாறு ரஷ்யா, பாகிஸ்தானுக்குத் தெரிவித்திருக்கிறது.**

காஷ்மீர் சம்பந்தமாக பாரதத்தின் கொள்கை ஏற்கனவே பாதுகாப்புச் சபையில் தெளிவு படுத்தப்பட்டிருப்பதாகடில்லியில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

திங்கட்கிழமை நடைபெறவிருக்கும் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இதையே பாரதம் மீண்டும் எடுத்துக்கூறும் என்றும் கூறப்பட்டது.

உண்மையான தீர்வுக்கு பாகிஸ்தான் தயாராய் இருந்தால்தான் காஷ்மீர் பிரச்னையைத் தீர்க்க முடியும் என்றும். ஆனால் பாகிஸ்தான் இவ் விஷயத்தில் அக்கறை இல்லை என்பதை இருநாடுகளின் பேச்சு வார்த்தையின் போது அது காட்டி விட்டதென்றும் புதுடில்லியில் கூறப்படுகிறது.

பேச்சுவார்த்தையின்போதே சீனவுடன் பாகிஸ்தான் எல்லை ஒப்பந்தத்தை சட்டவிரோதமாகச் செய்து கொண்டது என்றும், இதன் மூலம் 2000 சதுர மைல் காஷ்மீர் பிரதேசத்தை அது சீனவுக்கு விட்டுக் கொடுத்திருக்கிறதென்றும் மேலும் கூறப்பட்டது.

பாரதத்தின் தாராள கொள்கையைப் பயன்படுத்தி மேலும் புதிய நிபந்தனைகளை பாகிஸ்தான் புகுத்துவதை இந்தியா விரும்பவில்லை என்றும் கூறப்பட்டது.

---

## ஆந்திர முதன்மந்திரி ராஜினமா செய்வார்?

ஹைதராபாத், ஜன. 29

சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு ஒன்றைத் தொடர்ந்து பதவியிலிருந்து ராஜினமாச் செய்ய அனுமதி தருமாறு தாம் காங்கிரஸ் அக்ராசனர் திரு. காமராஜரைக் கேட்டிருப்பதாய் ஆந்திர முதன்மந்திரி திரு. சஞ்சீவரெட்டி கூறினர்.

## ஆணுக மாறிய யுவதி

சிலாபம், புதன்

பதினறு வயதுவரையும் பெண்ணுக இருந்து வந்த ஒருவர் ஆணுக மாறிய சம்பவம் இங்கு நடைபெற்றுள்ளது. பிங்கிரியாவைச் சேர்ந்த பதினறு வயது யுவதியான செல்வி அனிலின நோனவே ஆணுக மாறியவராவர். அனிலினும் அவரது தந்தையாரும் அவரது பெயரை மாற்றி ஆணின் பெயரை இடுவதற்காக சிலாபம் ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தார்கள். இதுவரையும் பெண்ணுடை தரித்துவந்த நோன ஆஸ்பத்திரிக்கு ஆண்கள் அணியும் உடை தரித்து வந்தார். விபரமான பரிசோதனை ஒன்று நடத்தப்படவிருக்கிறது.

## இன்று காந்திஜி சிரார்த்ததினம்

புதுடில்லி, ஜன. 30

காந்திஜியின் சிரார்த்ததினமான இன்று தியாகிகள் தினமாக அனுஷ்டிக்கப்படும். ராஜ்காட்டிலுள்ள காந்திஜியின் சமாதிக்கருகில் முப்படை அணிவகுப்பொன்று நடைபெறும்.

## மந்திரி கூட்டிய மகாநாடு

யாழ்ப்பாணம், வியாழன்

ஸ்தலஸ்தாபன மந்திரி கூட்டியுள்ள ஒரு மாகாநாட்டில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாண மேயர் திரு. டி. எஸ். துரைராசா கொழும்பு சென்றுள்ளார். இந்தமகாநாடு இன்று நடைபெறுகிறது.

## இன்று

சர்வோதயதினக் கூட்டம் மாலை 5 மணிக்கு திரு. கு. நேசையா தலைமையில் அகில இலங்கை காந்தீய சேவா சங்க ஆதரவில் யாழ்ப்பாண நகர மண்டபத்தில் நடைபெறுகிறது.

# புதுவருடத்தின் பின்னரே கூப்பன் கடையில் ஜவுளி!

கொழும்பு, புதன்

**துணிவகைகளை கூப்பனுக்கு வழங்குவதென்ற முடிவை சிங்களபுதுவருடத்தின பின்னரே அமுலுக்குக் கொண்டுவருவதென துணிவகை சம்பந்தமான மந்திரிகள உபகமிட்டி தீர்மானித்துள்ளது.**

நேற்று அலரி மாளிகையில் நடைபெற்ற கூட்டத்தில்ஜவுளிகளை கூப்பனுக்கு வழங்குவதெனவும், கூ. மோ. வி. விற்பனவு நிலையங்களில் ஜவுளிகளை விற்பனை செய்வதில்லை எனவும் முடிவு செய்யப்பட்டது. ஆனல் சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு,துணித் தட்டுப்பாடு இல்லாமலிருக்கும் பொருட்டு நேற்று செய்த முடிவை புதுவருடத்தின் பின்னரே அமுல் செய்வதென இன்று உபகமிட்டி முடிவு செய்தது.

துணிவகைகளை கூப்பனுக்கு வழங்குவதை, திட்டமிட்டு நல்ல முறையில் நடத்தாவிடில் பல பிரச்னைகள் ஏற்படுமாதலால் ஒரு நல்ல திட்டத்தை வகுக்கும்வரை அத்திட்டத்தை ஒத்திவைப்பது நல்லதென உபகமிட்டியில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. புதுவருடத்துக்கு முன்னர் கூப்பனுக்கு துணி வழங்கும் திட்டத்தை அமுல் செய்தால் புதுவருடத்துக்கு துணித்தட்டுப்பாடு ஏற்படும் எனவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

ஜவுளிகளைப் பதுக்கிவைத்திருக்கும் தனிப்பட்ட வியாபாரிகளுக்குத் தண்டனை விதிக்கக் கூடிய வகையில் வர்த்தக சட்டத்திற்கு திருத்தம் கொண்டுவரவேண்டுமென உபகமிட்டியில் வற்புறுத்தப்பட்டது.

# சுதந்திரதின பகிஷ்கரிப்பு பிரேரணைக்கு முன்னறிவித்தல்

## மாநகரசபை விசேஷகூட்டத்தை கூட்ட மூவர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வியாழன்

இலங்கையின் சுதந்திரதினக் கொண்டாட்டத்தைப் பகிஷ்கரித்து தமிழ் பேசும் பகுதிகளில் அன்றைய தினத்தை விடுமுறை நாளாகக் கருதாமல் வேலைநாளாகக் கருதி சட்ட மறுப்புச் செய்யும் படி தமிழ் பேசும் பகுதிகளிலுள்ள உள்ளூராட்சி சபைகள், பாடசாலைகள், வர்த்தகஸ்தாபனங்களைக் கேட்டுக் கொள்ள வேண்டுமெனக் கோரும் பிரேரணையொன்றை யாழ்ப்பாணம் மாநகரசபையின் விசேஷ கூட்டத்தில் நிறைவேற்ற வேண்டுமென மூன்று அங்கத்தவர்கள் யாழ்ப்பாண மேயரைக் கேட்டுள்ளனர்.

திருவாளர்கள் தம்பு கந்தையா, நா.த. செல்லத்துரை, ஹாஜி. வி. எம். எம். அபுசாலி ஆகிய மூன்று அங்கத்தவர்களும் சபையின் விசேஷ கூட்டமொன்றைக் கூட்ட வேண்டுமெனக் கோரியுள்ளனர்.

இலங்கை பிரிட்டிஷாரிடமிருந்து விடுதலைபெற்ற போதிலும இந்நாட்டிலுள்ள ஒரு பெரும் சமூகமான தமிழ் சமூகம் அடக்கி ஒடுக்கப்படுவதுடன் அவர்களின் மொழியை அழிக்கும். நடவடிக்கைகளை அரசாங்கம் செய்துவருவதாகவும் எனவே சுதந்திர தினத்தைக் கொண்டாட முடியாதிருப்பதுடன் அரசாங்கத்தின் மனப் போக்கை மாற்றுவதற்காக அவர்கள் எதிர்ப்பிலீடுபடுவார்கள் என்றும் இதில் ஒரு அம்சமாக சுதந்திரதினத்தைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்றும் பிரேரணையில் கூறப்பட்டுள்ளது.

கொழும்பு

# பொலிஸ் நிலையத்தில் தமிழில் வாக்குமூலம் பதிவு

## போராட்டத்திற்குப்பின் வெற்றிபெற்ற நபர்

கொழும்பு, புதன்

வெள்ளவத்தை பொலிஸ் ஸ்டேஷனில் அண்மையில் தமிழில் வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டுமென்று சென்ற தமிழர் ஒருவர் அவ்வாறு தமிழில் பதிவு செய்ய முடியாதென்று அங்கேயிருந்த உத்தியோகத்தர் கூறியதன் பேரில் திரும்பிவிட்டார்.

இதைத் தொடர்ந்து அந்தத் தமிழர் உதவி பொலிஸ் சுப்பிரிண்டனுக்குத் தொலைபேசி மூலம் விஷயத்தைத் தெரிவித்தார். அதன் பின்னர் சுப்பிரிண்டன்ட் வெள்ளவத்தைப் பொலிஸ் ஸ்டேசனில் உள்ள ஒரு உத்தியோகத்தருக்கு விஷயத்தைத் விளக்கியதன் பின் அந்தத் தமிழர் வாக்குமூலத்தை தமிழில் பதிவு செய்யமுடிந்தது. தமிழ் வாக்குமூலத்தைப் பதிவுசெய்த தமிழ்ப் பொலிஸ் உத்தியோகத்தர் அதுவேதான் தன் சேவைக்காலத்தில் முதன் முதலில் தமிழில் பதிவுசெய்த வாக்குமூலம் என்று குறிப்பிட்டார்.

டெஸ்ட் கிரிக்கெட்

## தென்னபிரிக்கா வென்றது

அடிலெய்ட், ஜன. 29

தென்னபிரிக்காவுக்கும் ஆஸ்திரேலியாவுக்குமிடையே இங்கு நடைபெற்ற 4-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் தென்னபிரிக்கா 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஸ்கோர விபரம் வருமாறு.

**ஆஸ்திரேலியா**

1-வது இன்னிங்ஸ் 345 ரன்கள், 2-வது இன்னிங்ஸ் 331 ரன்கள்.

**தென்னபிரிக்கா**

1 வது இன்னிங்ஸ் 595 ரன்கள், 2-வது இன்னிங்ஸ் (விக்கெட் நஷ்டமின்றி) 82 ரன்கள்.

## மிக மிக அதிகம்

பண்டாரவளை, புதன்

பண்டாரவளை கூட்டுறவுக் கடைகளில் சீனிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஆனல் தனிப்பட்ட வர்த்தகர்களிடம் ஏராளமான சீனி கிடைக்கிறது. ஆனல் ஒரே வித்தியாசம் விலை மிக மிக அதிகம்

புகையிலை - மிளகாய் - கத்தரி - முந்திரிகை முதலிய பயிர்களில் உண்டாகும்

சுருணைகளையும் புழுக்களையும் அழிப்பதற்கு

BAYER

பொலிடோலுடன்--மெற்றசிஸ்ரொக்ஸ்

FOLIDOL METASYSTOX

கலந்து நாற்று மேடையில் இருந்து பாவிக்கத் தொடங்கவும்

T'GRAMS ROYAEL ROYAL DISPNESARY PHONE 397 JAFFNA

### மணி வாக்கு

கத்தி, துப்பாக்கி முதலிய ஆயுதங்களைத் தாங்கியவர்கள்தான் வீரர்கள் என்று நினைப்பது தவறு; இந்தப் படைக்கலங்கள் எல்லாம் அச்சமுடையோருக்கே வேண்டும். சுத்த வீரர்களுக்கு ஆயுதபலமே வேண்டியதில்லை; அஞ்சாமை என்னும் அருங் குணமே போதும்.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு
EELA NADU
EELANADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சோபகிருது ஆண்டு தை மீ 17 உ (30-1-64)

### சாந்தி வழி

இன்று மகாத்மாவின் திவச சிரார்த்ததினம். சரியாக 16 ஆண்டுகளுக்கு முன் இந்தியா விடுதலை அடைந்த சிலமாதங்களுக்குள் காந்திமகாத்மா புதுடில்லியிலே பிரார்த்தனைக் கூட்டமொன்றுக்குச் செல்கையில் ஒருவகுப்பு வெறியனால் சுடப்பட்டு அமரரானார். வகுப்பு, மதஒற்றுமையை ஏற்படுத்த கூட்டுப் பிரார்த்தனை நடத்தி வந்த மகாத்மா அதே கூட்டத்துக்குச் செல்கையில் வகுப்புவெறியனின் கைத்துப்பாக்கிக் குண்டுக்குப் பலியானார். சிலதினங்களுக்கு முன்பாகவும் மேற்கு வங்காளத்திலும் கிழக்குப்பாகிஸ்தானிலும் வகுப்புக் கலகங்கள் நிகழ்ந்துள்ளன. மகாத்மா இருந்திருந்தால் என்று பலர் ஏங்கியிருப்பர். மக்களுக்காகத் தன் உயிரையீந்த மகாத்மாவின் தியாகத் திருநாள் இந்தியா, இலங்கை உள்ளிட்டு உலகின் பலபாகங்களிலும் கொண்டாடப்படுகிறது.

நூற்றாண்டு காலமாக அடிமைப்பட்டிருந்த நாட்டுக்குக் கத்தியின்றி, இரத்தமின்றி அகிம்சா முறையிலே விடுதலை தேடித் தந்து உலகிலே அரும்பெரும் சாதனையைச் சாதித்தவர் காந்திமகாத்மா. இது உலகிலேயே அதிக சாதனை. இந்து-முஸ்லிம் ஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு, கதர், கிராமக் கைத்தொழில் ஆகிய நிர்மாணத்திட்டங்களை ஆக்கமுறையில் அமைத்து சத்தியாக்கிரக ஆயுதத்தால் சூரியனே அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை இந்தியாவைத் தன்பிடியிலிருந்து கைவிடச் செய்து விடுதலை எடுத்துக் கொடுத்தவர் காந்திஜி.

அவர் நடத்திய போராட்டத்தினால் இலங்கை உள்ளிட்ட பல ஆசியஆபிரிக்க நாடுகள் விடுதலையடைந்தன. ஆனால் பெற்ற விடுதலையைப் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பு இலங்கைக்கும் மற்றும் புதிதாக விடுதலையடைந்த நாடுகளுக்கும் உண்டு. இந்த நாடுகளுக்குப் பலபலசோதனைகள் ஏற்பட்டுள்ளன. இந்தியாவுக்கும் இச்சமயத்தில் பல வழியாலும் பெரும்சோதனைகள் ஏற்பட்டுள்ளன.

இந்தச்சோதனைகள் எல்லாம் நீங்க அவரது நிர்மாணத் திட்டங்கள் வழிகாட்டக் காத்துள்ளன. சமூக ஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு, கதர், கிராமக் கைத்தொழில்கள் ஆகிய அவரது நான்கு அம்சத் திட்டத்தையும் சரிவரக் கைக்கொண்டு ஒழுகினால் நமது கஷ்டங்கள் நீங்கிவிடும். காந்திஜியின் திருநாளைக் கொண்டாடும் இத்தினத்தில் அவர் காட்டிய வழியைப் பின்பற்றுவதற்கு இந்தியா மட்டுமல்ல இலங்கையும் இதர நாடுகளும் உறுதி பூணவேண்டும். காந்தி வழி சாந்தி தரும்.

### ஆபிரிக்காபற்றி வாஷிங்டன் ஆலோசனை

வாஷிங்டன், ஜன. 29

வாஷிங்டனில் உயர்தர பிரிட்டிஷ், அமெரிக்க ராஜதந்திரிகள் ஆபிரிக்காவிலும், மத்திய கிழக்கிலும் ஏற்பட்டுள்ள கவலைதரும் சம்பவங்கள் பற்றி ஆலோசனை நடத்த ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த ஆலோசனை நான்கு தினங்கள் நடைபெறும்.

### "ஏர்சிலோனுக்கு" புதிய விமானம்

கொழும்பு, புதன்

"கொழும்பிலிருந்து பம்பாய் செல்வதற்கு ஏர்சிலோன் ஸ்தாபனம் புதிய ஏர்விமானத்தை வாங்க அனுமதிக்கப்பட வேண்டும் என அரசாங்கத்துக்குச் சிபார்சு செய்வதென போக்குவரத்து அமைச்சு முடிவு செய்திருக்கிறது.

### கவலையீனம்

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் ஒரு குழந்தை பிறந்து மூன்று தினங்களின் பின் திடீரென நோய்வாய்ப்பட்டதாகவும் அச்சமயம் கடமையாற்றிக் கொண்டிருந்த மருத்துவத்தாதியினதும் மற்றொரு தாதியினதும் கவலையீனமே இதற்குக் காரணமென்றும் புகார் கூறப்படுகிறது. இதில் ஓரளவாவது உண்மையிருப்பின் இதையிட்டு ஆஸ்பத்திரி நிர்வாகம் வெட்கமும் துக்கமும் அடைய வேண்டும். பத்து மாதம் சுமந்து பெற்றவளுக்குத்தான் குழந்தையின் அருமை தெரியும். அந்தத் தாயின் வேதனையை உணரக்கூடிய தாய்மார்களே பொறுப்பற்ற முறையில் நடந்திருப்பின் சரியான முறையில் விசாரணை நடத்தி கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியம்.

ஆஸ்பத்திரியில் சேவைசெய்யும் ஊழியர்கள் சம்பளத்துக்காக மட்டும் வேலை செய்பவர்கள் என்று தங்களைக் கருதக் கூடாது. அதை சிறந்த சேவையாகக் கருதுபவர்களே அங்கு கடமை பார்க்க முடியும். ஏற்கனவே ஆஸ்பத்திரிகளைப் பற்றி பல பல புகார்கள் வெளி வந்திருக்கின்றன. இப்புகார்களை அலட்சியம் செய்வதாயின் ஆஸ்பத்திரிகளுக்காகச் செலவு செய்யும் பெருந் தொகைப்பணம் வீணுவதாகவே கொள்ள முடியும். எனவே இப்புகார்கள் சம்பந்தமாக உரிய முறையில் விசாரணை நடத்தி தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டியது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கடமையாகும்.

"எங்களிடம் இதுவரையும் இருந்த ஒளியொன்று மறைந்துவிட்டது ... அது ஒரு சாதாரண ஒளியல்ல. இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த ஒளியை நாம் பார்க்க முடியும் இந்த நாட்டில்... பின்னர் உலகமே பார்க்க முடியும். ஆனால் மறைந்த ஒளி உண்மையின் உறைவிடம்" என்று ஆசிய ஜோதி நேரு, காந்திஜி 1948-ம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ந் திகதி மாலை மரணமான செய்தியைக் கேட்டதும் கூறினர். காந்திஜியின் 16-வது சிரார்த்த தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.



## காந்தி என்ற தெய்வம்

காந்தி என்ற தெய்வம் ஒன்று வந்தது - அது
கருணையன்பு பொறுமை வீரம் தந்தது
சாந்தி தர்மம் சேர்த்துத் தீமை வென்றது - எங்கும்
சமத்துவமே உண்மை என்று நின்றது

வாழ்வதற்கு வழியமைத்துத் தந்தது - தேசம்
வளர்வதற்கும் கைத்தொழிலைத் தந்தது
வாழ்வதற்குச் சுதந்திரங் காண் என்றது - இதை
வழங்குதற்கும் தியாகத் தீயில் நின்றது

அடிமை என்று யாருமில்லை என்றது - காணும்
அச்சமெல்லாம் அழித்து வெற்றி கண்டது
கொடுமை எல்லாம் நீங்கும் போக்கில் நின்றது - சகம்
குவலயத்தில் பெருக அன்பு கொண்டது

மனிதரிலே மிருகமாகி வாழ்ந்தவர் - அந்த
மனித தெய்வ வழி மறந்து போந்தனர்
மனிதருக்கே மனிதர் வாழும் நன்மையும் - மூட
மனிதர் அறியாது தீங்கில் வீழ்ந்தனர்

மதங்களுக்கு வேலிகட்டி மறைத்தவர் - தேசம்
மாசுபடும் தீமைகளை நிறைத்தவர்
மதங்களையும் வகுப்புவாத மாக்கினர் - அதால்
மக்களையும் தாழ்த்தி அதமாக்கினர்

சாந்தி தெய்வம் நொந்து கண்ணீர் வடித்தது - மானம்
காக்க வந்த இளைஞர் உள்ளம் துடித்தது
சாந்தி சாந்தி என்று சொன்ன காந்தியைச் - சுட்டு
சாய்த்துவிடச் சிலர்க்குப் பேய் பிடித்தது

அன்பு அன்பு என்று சொன்ன காந்தியை - அவன்
அன்பறிந்த மானிடனே சுட்டனன்
துன்பமெல்லாம் நீக்க வந்த தெய்வமும் - வையத்
துயரமெல்லாம் தாங்கி ஈற்றில் ஓய்ந்தது

செல்வர்களும் ஏழைகளும் பதைத்தனர் - காந்தி
சுடுபட்ட சேதி கேட்டு திகைத்தனர்
நல்லவர்கள் உளம்பதறி இளைத்தனர் - வைய
நாட்டவரும் கண்கலங்கி மலைத்தனர்

காந்தி என்ற தெய்வம் மறைந்தேகினும் - அது
காட்டிய நல்லன்பு வழி மாயுமோ
காந்தி என்ற தெய்வம் எந்தக் காலமும் - நம்
கருத்தில் குடிகொண்ட உண்மை ஓயுமோ

ஆணவத்தை மீறும் வெற்றியாக்கமே - காந்தி
அருளி நின்ற தனிமனித நோக்கமாம்
காணுமிந்த உலகிலே போராயுதம் - தாங்கும்
கருத்தும் பாதுகாவலுக்கோர் ஆக்கமாம்

அடிமை நிலை நம்மை விட்டு அகலவே - ஒரு
அன்புவழி ஏற்று வெற்றி காணுவோம்
படிமிசையில் நமது தேசம் காக்கவே - போர்ப்
படைப்பலத்தால் மிக வலிமை பூணுவோம்

காந்தி எம்மை விட்டுச் சென்ற போதிலும் - அவர்
காட்டிச் சென்ற நேர் வழியில் செல்லுவோம்
மாந்தர் குலம் வாழவழி செய்குவோம் - இந்த
மாநிலத்தில் இன்பமெல்லாம் எய்துவோம்.

—சக்தீ அ. பாலையா

## காந்திஜி வாக்கு

பிள்ளைகளுக்குப் பெற்றோர் எழுதும் போதும்; மனைவியருக்குக் கணவன் எழுதும் போதும், தாய் மொழியில் எழுதாமல், ஆங்கிலத்தில் எழுதுவதை சிறிது கூட என்னால் சகிக்க முடியவில்லை.

★

அந்நிய ஆட்சியால் நம் நாட்டிற்கு விளைந்த கேடுகள் பல. அவற்றில் அந்நிய மொழியாகிய ஆங்கில மொழியை வலிந்து புகுத்தி, நமது இளைஞர்கள் இழிந்த நிலையடையவேண்டுமென்ற நோக்கத்தோடு அவர்களை ஆங்கிலம் படிக்கச் செய்திருப்பதும் ஒன்று. அந்நிய ஆட்சியின் பயனால் இந்தியாவில் விளைந்துள்ள மிகப் பெரிய கேடுகளில் இதையும் ஒன்றாகச் சரித்திரம் சொல்லப் போகிறது.

★

மனிதன் என்றால், வெறும் அறிவு மாத்திரமல்ல, அல்லது ஸ்தூல உடலுமல்ல; உணர்ச்சி மட்டுமோ; அதுவுமல்ல. அறிவு, உடல், உணர்சசி ஆகிய மூன்றும் அழகிய முறையிலே ஒன்றுகூடினால் தான் மனிதன் ஆகிறான். இவை மூன்றையும் வளர்ப்பதே உண்மையான கல்விமுறையாகும்.

★

ஒரு காரியத்தை அரசாங்கத்தார் செய்கிறார்களென்று வைத்துக் கொள்ளுவோம். அது தவறு என்று நமக்குத் தோன்றுகிறது. அந்தத்தவறை அரசாங்கத்தாருக்கு எடுத்துக் காட்ட வேண்டுவது நமது கடமையென்று நினைத்தால், அதைக் கட்டாயம் எடுத்துக் காட்ட வேண்டுமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். அவ்விதம் எடுத்துக் காட்டுவதை ராஜத்துவேஷம் என்று அரசாங்கத்தார் சொன்னாலும் அதற்காகப் பின் வாங்கக் கூடாது; அந்த ராஜத்துவேஷத்தைச் செய்தே தீரவேண்டும். ஆனால் அதைச் செய்வது உங்களுடைய பொறுப்பு. அதனால், ஏற்படும் விளைவுகளை நீங்கள் அனுபவிக்கத் தயாராயிருக்க வேண்டும்.

★

நிலையான எந்தக் காரியத்தையும், அல்லது உண்மையான எந்தக் காரியத்தையும் சாதிப்பதற்கு முதல் படியாக, நமது நெஞ்சத்தில் அஞ்சாமை வேரூன்றி நிற்க வேண்டுமெனபது எனது தாழ்மையான அபிப்பிராயம். சமய உணர்ச்சி விழிப்படைந்தாலன்றி, அஞ்சாமை என்ற நிலையை நாம் அடைய முடியாது. இனிக் கடவுள் ஒருவருக்கே அஞ்சுவோம். எந்த மனிதனுக்கும அஞ்ச மாட்டோம்.

★

கடவுளை வேண்டி உண்மையான நோக்கத்தோடு செய்கிற எந்தக் காரியமும் வீண் போகாது; காரியத்தை அப்படிச் செய்வதிலேயே மனிதன் வெற்றி பெறுகிறான். செயலின் பயனோ இறைவன் கையில் இருக்கிறது.

★

சத்தியத்தில் நிற்பதென்பது பஞ்சணையில் படுத்திருப்பதல்ல. உண்மையைக் கடைப்பிடிப்பதற்கு எவ்வளவோ தியாகம் செய்ய வேண்டியிருக்கிறது; அதிலேஎவ்வளவோ கஷ்டம்; எவ்வளவோ கட்டுப்பாடுகள்; இப்படியெல்லாம் இராமல் ஆனந்தமான காரியமாக மட்டும் இருக்குமானால், அதிலே இவ்வளவு அழகுக்கு இடமில்லை. வானமே இடிந்து தலையில் விழுவதாயிருந்தாலும், நாம் உண்மையைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டும்.

# போர்மோஸாவுடன் ராஜதந்திர உறவை

# பிரான்ஸ் முறிக்காது

## "இருசீனக் கொள்கையை பீகிங் ஒருபோதும் ஏற்காது" —சீனா

## பிரெஞ்சு பண்டங்களுக்கு தென்வியட்னும் தடை?

பாரிஸ், ஜன. 29

சீனாவுக்கு நிபந்தனையற்ற அங்கீகாரம் வழங்கவிருப்பதாய் போர்மோஸாவுடனுள்ள ராஜதந்திர உறவை முறித்துக் கொள்ளும் உத்தேசம் பிரான்சுக்குக்கிடையாது என பாரிசில் அரசாங்க அதிகாரி ஒருவர் கூறினார். இதேசமயம் பீகிங் அரசாங்கம் விடுத்துள்ள ஓர் அறிக்கையில், சகலசீன மக்களுக்கும் சட்டபூர்வமான அரசாங்கம் என்ற தோரணையிலேயே பீகிங்கை பிரான்ஸ் அங்கீகரித்திருப்பதாயும் எனவே விலக்கப்பட்ட ஓர் அரசாங்கத்துடனும் ராஜதந்திரஉறவு வைத்துக் கொள்வது இருசீனக் கொள்கையை அங்கீகரிப்பதாகும் என்றும் சீனா ஒருபோதும் இதற்கு இணங்காதென்றும் கூறியிருக்கிறது.

இதற்கிடையில் போர்மோஸா நேற்று பிரான்சுக்கு அனுப்பிய இரண்டாவது ஆட்சேபக் குறிப்பில் "பாரிஸ் நடவடிக்கை நேசமற்ற செயல்" என மீண்டும் குற்றஞ்சாட்டியது.

அதேசமயம் பிரெஞ்சுபண்டங்களுக்குத் தடைவிதிக்கப் போவதாய் தென்வியட்னும் பயமுறுத்தியிருக்கிறது.

சீனாவை இப்போது அங்கீகரிக்கும் உத்தேசம் ஆஸ்திரேலியாவுக்குக் கிடையாது என அந்நாட்டு வெளியுறவுமந்திரி கூறியிருக்கிறார்.

போர்மோஸா மக்களை அமெரிக்கா ஒருபோதும் கைவிடாது என வெளிநாட்டு மந்திரி திரு. டீன் ரஸ்க் மீண்டும் அறிவித்திருக்கிறார். "பகைமைக் கொள்கை பலனளிக்கும் என பீகிங் கருதினால் அது அபாயகரமானது. பலாத்காரத்தைக் கைவிடத் தயாராய் இருக்கும் அரசாங்கம் சீனாவில் தோன்றினால் மட்டுமே அமெரிக்கா அதை அங்கீகரிக்கும்" என்றும் அவர் கூறினார்.

## காஷ்மீர் விஷயமாக பிரிட்டிஷ்மந்திரிசபையில்பிளவு?

### இந்தியாவுக்கு எரிச்சலை கொடுக்க பட்லர் விரும்பவில்லை

கராச்சி, ஜன. 29

காஷ்மீர் விஷயமாகத் தன் நிலை குறித்து பிரிட்டிஷ் அரசாங்கம் சிறிது குழப்பத்துடனும் பிளவுபட்டும் இருப்பதாக "டான்" பத்திரிகை இன்று கூறியது.

கன்சர்வேட்டிவ் அரசாங்கத்தில் இருகோஷ்டிகள் இருப்பதாக இப்பத்திரிகையின் லண்டன் நிருபர் கூறியிருக்கிறார்.

"ஒரு கோஷ்டியின் தலைவர் காமன்வெல்த் உறவுமந்திரி திரு. டங்கன் சாண்டஸ், பாதுகாப்புசபையில் பிரிட்டிஷ்தூதுகோஷ்டி ஆக்கபூர்வ பணியாற்ற வேண்டும் என்றுஅவர் கருதுகிறார்.

இந்தியாவுக்கு எரிச்சலை உண்டாக்கக்கூடிய அல்லது சீனாவை எதிர்க்க ஆசியநாடுகளைத் திரட்டும் ஆங்கிலோ-அமெரிக்கத் திட்டத்தைப் பாதிக்கக்கூடிய எந்தச் செயலிலும் பிரிட்டன் இறங்கக்கூடாது என மற்றொரு கோஷ்டி கருதுகிறது. இதன் தலைவர் அயல்நாட்டு மந்திரி திரு. பட்லர்.

காஷ்மீர் விஷயமாக திரு. பட்லரின் போக்கை லேசாகத் தள்ளிவிட முடியாது. அவரது அயல்நாட்டிலாகாதான் ஐ. நா.விலுள்ள பிரிட்டிஷ் தூதுகோஷ்டிக்குக் கட்டளைகளை அனுப்புகிறதே ஒழிய காமன்வெல்த் உறவு இலாகா அல்ல.

மந்திரிசபையில் பிளவால் காஷ்மீர் சம்பந்தமான பிரிட்டிஷ் கொள்கை குழப்பத்தில் ஆழ்ந்துவிட்டது. மற்றும் சைப்பிரஸ், மலேஷியா, ஏடன், ஸான்ஸிபார், தங்கனிகா, உகண்டா, கென்யா ஆகிய நாடுகளில் அரசியல், ராணுவ நெருக்கடிகளில் பிரிட்டன் சிக்கியுள்ளதால் காஷ்மீர் விஷயத்தைப் பிரிட்டன் பின்னுக்குத்தள்ளிவிட்டது.

இத்தொல்லைக்கிடமான இடங்களிலெல்லாம் அமெரிக்க இந்திய ஆதரவைப் பெற பிரிட்டன் துடிதுடிக்கிறது. உயர்கட்டத்திலுள்ள சிலபிரிட்டிஷ்காரர்கள் காஷ்மீரைக் கைவிடலாம் என நினைக்கிறார்கள். இந்தியா-பாகிஸ்தான் தகராறுபற்றித் தங்கள் சோர்வை அவர்கள் மறைக்கவில்லை.

பிரிட்டிஷ் பத்திரிகை, ரேடியோ, டெலிவிஷன் தகவல்களில் காஷ்மீர் விஷயமாகவும் சமீப வகுப்புக் கலவரங்களிலும் பாகிஸ்தான்மீது அனுதாபமின்மையே காணப்படுகிறது.

## "கலகம் ஏற்பட்டால் என்ன செய்யலாம்?"

கல்கத்தா, ஜன. 29

கல்கத்தாவில் இனி எப்போதுமே கலகம் ஏற்படாமல் இருக்கும்பொருட்டு எவ்வித நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்பது குறித்து மத்திய மந்திரிகளும், மேற்கு வங்க மந்திரிகளும் ஆலோசனை நடத்தவிருக்கிறார்கள். திரு. குல்ஸாரிலால்நந்தா, திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி, திரு. மேஹர் சந்த்கன்னா ஆகிய மத்திய மந்திரிகளும், முதன் மந்திரி, நிதி மந்திரி, அகதிகள் பராமரிப்பு மந்திரி ஆகிய மேற்குவங்க மந்திரிகளும் இப்பேச்சுக்களில் கலந்துகொள்கிறார்கள்.

இதற்கிடையில் அஸ்ஸாமில் பிரவேசித்துள்ள 20,000 அகதிகளுக்கு முகாம்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. கௌஹாட்டியிலிருந்து அவர்களுக்கு உணவு சப்ளைசெய்யப்பட்டு வருகிறது.

## பிராண்டோவுடன் ஸ்ரீமதி கென்னடி விருந்துண்டார்

வாஷிங்டன், ஜன. 29

கொலை செய்யப்பட்ட அமெரிக்க ஜனாதிபதியின் மனைவியான ஸ்ரீமதி ஜேக்வலின் கென்னடியும், அவரது சகோதரி இளவரசி ரீராட்ஸிவில்லும் நடிகர் மார்லின் பிராண்டோவுடன் விருந்துண்டனர். திரு. கென்னடி மறைந்த பின் ஹோட்டல் விருந்தொன்றில் ஸ்ரீமதி கென்னடி கலந்து கொள்வது இதுவே முதல் தடவையாகும்.

## ஜோன்ஸனுக்கு கென்னடி அறிக்கை

வாஷிங்டன், ஜன. 29

அட்டோர்னிஜெனரல் திரு. ராபர்ட் கென்னடி, இந்தோனேஷியா, மலேஷியா, பிலிப்பைன்ஸ் தலைவர்களுடன் தாம் நடத்திய பேச்சுக்கள் பற்றி ஜனாதிபதி ஜோன்சனுக்குத் தெரிவித்திருக்கிறார். சென்ற திங்கட்கிழமை அவர் லண்டன் வழியாக வாஷிங்டன் திரும்பினார்.

மலேஷியாவின் பாதுகாப்புத் தேவைகள் பற்றி அறிவதற்காக ஆஸ்திரேலிய பாதுகாப்பு தூதுகோஷ்டி ஒன்று கோலாலம்பூர் வந்திருக்கிறது.

## ஜெட் யுகத்தில் இந்தியா பிரவேசம்

புதுடில்லி, ஜன. 29

இந்தியாவில் 5 பகுதிகளில் "கேரவல்" ஜெட் விமானங்கள் போக்குவரத்துச் செய்யுமென இந்திய விமானக் கார்ப்பரேஷன் அறிவித்துள்ளது. இதன் மூலம் பிரயாணம் செய்வதற்கு, முன்பு ஏற்பட்ட நேரம் பாதியாகக் குறையும் 30,000 அடி உயரத்தில் மணிக்கு 510 மைல் வேகத்தில் இந்த விமானங்கள் செல்லும்.

## மலையாளத்தில் 4-வது தொகுதி

புதுடில்லி, ஜன. 29

மலையாள மொழியில் 4-வது கலைக்களஞ்சியத் தொகுதி நேற்று டில்லியில் வெளியிடப்பட்டது. மொத்தம் 8 தொகுதிகள் வெளியிடப்படும்.

—

புதுடில்லி, ஜன. 29

டில்லி, பம்பாய் முதலிய இடங்களில், பஞ்சாப் தாக்குதலில் உயிர் இழந்த தலைவர் லாலா லஜபதிராயின் நினைவு தினம் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது.

## "சைப்ரஸில் அமெரிக்க துருப்புக்களை நிறுத்துக"

### வாஷிங்டனுக்கு பிரிட்டன் வேண்டுகோள்

வாஷிங்டன், ஜன. 29

அமெரிக்கத் துருப்புக்களை சைப்ரஸில் நிறுத்துமாறு பிரிட்டன் வாஷிங்டனைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. இதுசம்பந்தமாகப் பேச பிரிட்டிஷ் ஜெனரல் ஒருவர் இங்கு வந்திருக்கிறார். அதேசமயம், ஐ. நா. அங்கீகாரத்துடன் அமெரிக்கத் துருப்புக்களை ஏற்கத் தாம் தயாராய் இருப்பதாக சைப்ரஸ், பொதுக்காரியதரிசி யுதாண்டுக்குத் தெரிவித்திருக்கிறது.

லண்டனில் நடைபெறும் சைப்ரஸ் மகாநாட்டிலிருந்து துருக்கி விலக, கொள்கை அளவில் முடிவு செய்திருப்பதாக அறிவிக்கப் பட்டதைத் தொடர்ந்து, பிரிட்டனின் புதிய நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

துருக்கியில் துருப்புக்களின் நடமாட்டம் பற்றி செய்தி கிடைத்ததைத் தொடர்ந்து கிரீசும் தன் ராணுவங்களை உஷார்ப் படுத்தியிருக்கிறது. ஐரோப்பாவிலுள்ள நேட்டோ தளபதி துருக்கித் தலைநகர் அங்காராவுக்குச் சென்றிருக்கிறார். கிரீஸ் தலைநகர் ஏதென்சுக்கும் அவர் செல்வார் எனக் கூறப்பட்டது.

சைப்ரசுக்கு அமெரிக்கத் துருப்புக்களை அனுப்புமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஜனாதிபதி ஜோன்ஸன் அனுதாபமுடன் பரிசீலனை செய்து வருவதாக அறிவிக்கப்பட்டது.

## வருகிற திங்கட்கிழமை பாதுகாப்புசபை கூடும்

### காஷ்மீர் பற்றி விவாதிக்க:

நியூயோர்க், ஜன. 29

காஷ்மீர் சம்பந்தமான பாகிஸ்தான் புகார்பற்றி ஆராய வருகிற திங்கட்கிழமை இரவு பாதுகாப்புசபை கூட இருப்பதாக ஐ. நா. தலைமைக் காரியாலயம் அறிவித்தது.

பாதுகாப்பு சபையை இந்த வாரமே கூட்டவேண்டுமென பாகிஸ்தான் வற்புறுத்தியதாயும், ஆனால் பாரத பிரதிநிதி நியூயோர்க் வருவதற்குமுன், சபையைக் கூட்டுவதற்கான அவசரம் எதுவுமில்லையென பெரும்பான்மை அங்கத்தினர்கள் கருதுவதாயும் அடுத்த கூட்டத்திற்குத் தலைமைவகிக்கவிருக்கும் பிரேஸில் பிரதிநிதி கூறினார்.

இந்தியப் பிரதிநிதியாகச் செல்லும் கல்வி மந்திரி திரு. சக்ளா, இன்று டில்லியிலிருந்து நியூயோர்க் புறப்பட்டார். இதற்குமுன் அவர் பிரதமர் நேரு, திரு. லால்பகதூர்சாஸ்திரி ஆகியோரைச் சந்தித்தார்.

காஷ்மீர் பாரதத்தின் பிரிக்கமுடியாத ஒரு பகுதியென்ற தமது கொள்கையில் மாற்றம் எதுவுமில்லையென ரஷ்யா பாகிஸ்தானுக்குத் தெரிவித்திருக்கிறது. தமக்கு ஆதரவு கோரி அதிபர் அயூப்கான் அனுப்பியிருந்த கடிதத்திற்குப் பதலளிக்கும்வகையிலேயே ரஷ்யா இவ்வாறு தெரிவித்திருக்கிறது

பாதுகாப்புசபையில் பாகிஸ்தான் சார்பாக வெளிநாட்டு மந்திரி பூட்டோ கலந்துகொள்கிறார்.

## "திராவிடஸ்தான்" என்பது தெளிவற்ற பிரதேசம்

### பிரிட்டிஷ் வல்லுனர் கருத்து

சென்னை, ஜன. 29

"திராவிடஸ்தான் ஏற்படுவதாக இருந்தால், சுதந்திர, மலையாள, கர்நாடக கோரிக்கைகளிலும் நியாயமிருக்கக்கூடும்" என இங்கு பேசிய லண்டன் சர்வகலாசாலைப் பேராசிரியர் திரு. ஏ. எல். பஷம் கூறினார்.

"இந்தரீதியில் வாதித்தால் நான்கு கிராமங்களுக்கு ஒரு அரசு ஏற்படக்கூடும். முடிவின்றி இத்தகைய பிரச்னைகள் ஏற்படக்கூடும்" என்றும் தென்னாசிய சரித்திர வல்லுனராகிய அவர் சென்னை சர்வகலாசாலை ஆதரவின்கீழ் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவில் கூறினார்.

இந்தியா ஒரே ஒரு பலமான அரசாங்கத்தின்கீழ் இருந்தபோது பெரும் முன்னேற்றம் ஏற்பட்டது என்ற கருத்தையும் அவர் எதிர்த்தார். சிறிய, சுதந்திர மன்னர்களின் கீழ் சுபிட்சமும், மகிழ்ச்சியும் ஏற்பட்டன என்பதற்குப் பலத்த சான்றுகள் இருப்பதாய் அவர் கூறினார்.

பிரிட்டிஷ் பேராசிரியர் மேலும் கூறியதாவது:—

"வேதகால முடிவில் ஆரியர் என்ற பதம் தன் இனரீதியான பொருளை இழந்துவிட்டது. நவீன விஞ்ஞான சிந்தனைப்படியும் ஆரியர்—திராவிடர் பிளவு பொருளற்றது.

திராவிடஸ்தான என்பது தமிழ் ஜில்லாக்கள் உள்ள தற்போதைய சென்னை ராஜ்யமாகிய தெளிவற்ற பிரதேசமாகும். தீவகற்பம் முழுவதிலும் ஆரியர் பரவினர். தமிழ்ச் சங்க இலக்கியங்களிலும் அவர்களுடைய செல்வாக்கைக் காணலாம். ஹிந்துக் கலாச்சாரம் சிறப்புடன் விளங்கியகாலத்தில் ஆரியர்கள் திராவிடர்களிடையே விரோதமில்லை. இந்தியாவின் மன்னர்களிடையே நடந்த போர்கள் இனரீதியில் இருக்கவில்லை. சமீபகாலம் வரை அரசியலில் அல்லது மதத்தில் வடக்குக்கும் தெற்குக்கும் இடையே பிளவு இல்லை. இந்தியாவுக்கு வந்தது-ஆரியர் திராவிடரிடையே கலப்புத் திருமணங்கள் நடந்தன. அவர்களிடையே பிளவை இப்போது பெரும்பாலும் அரசியல்வாதிகள்தான் தங்கள் நோக்கத்திற்காகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். வர்த்தகத்திலும், கடல் கடந்துசெல்வதிலும் இந்திய மக்களில் தமிழர்கள் தலைசிறந்து விளங்கினார்கள்."

# ‘இடதுசாரியினர் ஆட்சிசெய்ய தருணம் வந்துவிட்டது’

—என். எம்.

தெகிவளை, புதன்

“மக்கள் தங்களை ஆட்சி செய்யக்கூடிய ஒரேயொரு நல்ல கட்சி இடதுசாரி முன்னணி தான் என்பதை உணர்ந்துவிட்டார்கள். இடதுசாரி முன்னணியினர் நாட்டை ஆளும் முறை வந்துவிட்டது” என்று டாக்டர் என். எம். பெரேரா, பொரளை இடைத் தேர்தலில் இடதுசாரி முன்னணி அபேட்சகர் திருமதி விவியன் குணவர்த்தன வெற்றியீட்டியதைக் கொண்டாடுமுகமாக நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார். பொரளை இடைத்தேர்தல் முடிவடைந்தபின்னர் திரு. லெனோரா வெளியிட்ட அறிக்கை யு. என். பியின் கொள்கைகளைத் தெளிவாகக் காட்டுகின்றது எனவும், மக்களை அடித்து ஆதரவுபெறுவதற்கு இடதுசாரி முன்னணியினரிடம் பணமில்லை என்றும் டாக்டர் பெரேரா மேலும் தெரிவித்தார்.

திரு. பீட்டர் கெனமன் பேசுகையில், இடதுசாரி முன்னணியினர் தேர்தலுக்காக மட்டும் பாடுபடவில்லையென்றும் ஏழை மக்களின் பிரச்னைகளைப் பற்றி அக்கறை செலுத்துவதாகவும் தெரிவித்தார். வாழ்க்கைச் செலவைக் குறைக்கும்படி அரசாங்கத்தைக்கோரி இடதுசாரி முன்னணி மகஜர் ஒன்றைத் தயாரித்துவருவதாகவும் பிரமாண்டமான ஊர்வலம் ஒன்றை நடத்தியே அதை அரசாங்கத்திடம் கொடுக்கப் போவதாகவும், அதில் எல்லோரையும் கையெழுத்திடுமாறும் கேட்டுக்கொண்டார்.

டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வா பேசுகையில், விவசாயிகளும், தொழிலாளர்களும் ஒன்றுபட்டுப் போராட்டம் நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். தங்களுக்குத் தெரிந்தமட்டில் நிக்கவரெட்டியாவைச் சேர்ந்த விவசாயிகள் ‘கோவி பெரஹரா’ ஒன்றை நடத்தினார்கள் எனவும் இது கிராமப்புற மக்கள் அரசாங்கத்தில் நம்பிக்கையிழந்துவிட்டார்கள்என்பதைக் காட்டுவதாகவும் திரு. கொல்வின் ஆர். டி' சில்வா தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற நிக்கவரெட்டியா, பொரளை இடைத்தேர்தல்கள் பண்டாரநாயக்கா ஆட்சி காலம் முடிந்துவிட்டதென்பதை எடுத்துக் காட்டுகின்றது என திரு. பிலிப் குணவர்த்தன பேசுகையில் தெரிவித்தார். காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்கா செய்த நன்மைகளைக்கொண்டே திருமதி பண்டாரநாயக்கா ஆட்சிக்கு வந்தாரெனவும் தனது கணவன் பெற்ற புகழையும் திருமதி பண்டாரநாயக்காவின் ஆட்சி கெடுத்துவிட்டதெனவும்குறிப்பிட்ட திரு. பிலிப், விதவைகளுக்கு இனி இலங்கை மக்கள் ஆதரவு கொடுக்கமாட்டார்கள் எனவும் தெரிவித்தார்.

தமக்கு ஆதரவளித்தவர்களுக்கு திருமதி விவியன் குணவர்த்தன நன்றி தெரிவித்தார்.

# “வாழ்க்கைச்செலவு குறையாவிடின் விவசாயிகள் புரட்சி ஏற்படும்”

—எம். பி.

வென்னப்புவ, புதன்

“வாழ்க்கைச் செலவு குறைக்கப்படாவிட்டல் விவசாயிகள், தொழிலாளிகள் புரட்சி ஒன்று ஏற்படுவதைத்தவிர்க்க முடியாது” என கட்டான எம். பி. திரு. விஜயபால மென்டிஸ் பார்லிமெண்டில் ஆருடம் கூறினார்.

“நாட்டில் லஞ்சமும், ஊழலும் மலிந்துவிட்டன. இவற்றை ஒழிக்க முயல்வதாக உறுதியளித்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம், இதற்கு மாறான முறையிலேயே நடக்கிறது.

தற்போதைய நிலைமைக்கு ஐக்கிய இடதுசாரி முன்னணித் தலைவர்களும் பெருமளவு காரணம். சுதந்திரக் கட்சி அரசாங்கம் ஊழலும், திறமையின்மையும் கொண்டது எனத் தெரிந்திருந்தும், இடதுசாரி ஐக்கிய முன்னணி 1956, 1960-ம் ஆண்டுத் தேர்தல்களில் அரசாங்கத்தை ஆதரித்தது” என்றும் அவர் கூறினார்.

திரு. ஹியூ. பெர்னாண்டோ பேசுகையில், அரசாங்கம் சர்வாதிகாரத்தை நோக்கி முன்னேறிவருகிறதெனக் கூறினார்.

“அத்தியாவசியப் பொருட்களின் விலையை உயர்த்துவதன் மூலம் மக்கள் புரட்சி ஏற்படுமென்றும், இதைத் தொடர்ந்து ராணுவ சர்வாதிகாரத்தை ஏற்படுத்தலாமென்றும் அரசாங்கம் கருதுகிறது” என்றும் அவர் கூறினார்.

பத்திரிகைச் சுதந்திரத்தை அரசாங்கம் நசுக்குகிறது எனக் கண்டித்த அவர், மக்களின் ஜனநாயக உரிமையை நசுக்க வேண்டாம் என அரசாங்கத்தை எச்சரித்தார்.

இக்கூட்டம் யு. என். பி.யின் ஆதரவில் நடைபெற்றது.

# “பேனு குமாஸ்தாக்களைவிட விவசாயியே முக்கியமானவர்

## அவர்களுக்கு அதிக சம்பளம் கொடுபடவேண்டும்” —பீலிக்ஸ்

தொம்பே, புதன்

“நாற்காலியில் அமர்ந்து பேனு பிடிக்கும் குமாஸ்தாக்களைவிட உணவை உற்பத்தி செய்யும் விவசாயியே மிக முக்கியமானவர். குமாஸ்தாக்களைவிட விவசாயிகளுக்கு அதிக சம்பளம் கொடுக்கப்படவேண்டும்” என உணவு மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தச்சுப் பயிற்சி நிலையம் ஒன்றைத் திறந்துவைத்துப் பேசும்போது குறிப்பிட்டார்.

“நமது சோஷலிஸ்ட் தோழர்கள் சிலர், வேலைநிறுத்தத்தை ஏற்படுத்துவதற்காக நகரிலுள்ள தொழிலாளர்களைமட்டும் ஆதரிக்கிறார்கள்” என்றும் அவர் கூறினார்.

“விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம், பெரும் சேவை செய்திருக்கிறது. இலங்கையின் தற்போதைய உணவு, ஜவுளிப் பிரச்னைகளுக்கு இறக்குமதி பரிகாரமல்ல. நாட்டில் அதிக உற்பத்தி செய்வதன் மூலம், வெளிநாடுகளுக்குப் பணம் செல்லாமல் சேமிப்பதே பரிகாரம் என்றும் மந்திரி கூறினார்.

அன்னாசி உற்பத்தியாளர்களுக்கு கடனளிக்கும் திட்டம் ஒன்றை ஸ்தாபிக்கத் தாம் உத்தேசித்திருப்பதாயும் அன்னாசிக்கு நல்ல மார்க்கெட் இருக்கிறதென்றும் அவர் கூறினார்.

திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா பேசும்போது குறிப்பிட்டதாவது:

“1953-ம் ஆண்டுக்கு முன் சிங்கள ஆசிரியர்களும் விவசாயிகளும் ஆயுர்வேத வைத்தியர்களும் மட்டுமே சிங்களம் பேசினார்கள். இன்றோ ரஷ்யா, சீனா, செக்கோஸ்லோவேகியா ஆகிய நாடுகளின் பல்கலைக் கழகங்களிலும் சிங்களம் போதிக்கப்படுகிறது. சர்வதேச விவகாரங்கள் கூட சிங்களத்தில் விவாதிக்கப்படுகின்றன.”

# இந்திய ஏற்றுமதி அதிகரிப்பு

புதுடில்லி, ஜன. 28

நடப்பு நிதி ஆண்டில் இந்தியா ரூபா 800 கோடிக்கு அதிகமான பெறுமதியுள்ள பண்டங்களை ஏற்றுமதி செய்யுமென வெளி வர்த்தக மந்திரி திரு. மனுப்பாய்ஷா கூறியுள்ளார்.

21 நாடுகளில் நடைபெறவிருக்கும் வர்த்தக பொருட்காட்சியில் இந்தியா பங்குபற்றவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

---

# பழையன விலக்கி புதியன கொள்ள வேண்டும்

—பீலிக்ஸ்

தொம்பே, செவ்.

ஏகாதிபத்தியவாதிகள் இயற்றிய சட்டங்கள் சில, நாட்டு வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருப்பதாகவும், அவற்றை நீக்கி பதிலாக ஜனநாயக அடிப்படையில் மக்களின் அங்கீகாரத்துடன் புதிய சட்டங்களை இயற்றவேண்டும் எனவும் விவசாய கூட்டுறவு மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தொம்பேயில் உள்ள வட்டுறகம என்ற கிராமத்தில் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் ஒன்றைத்திறந்துவைத்துப்பேசுகையில் தெரிவித்தார்.

ஜனநாயகத்தின் மீது தான் பெருமதிப்பு வைத்திருப்பதாகவும், தங்களைத் தாங்களே ஆளும் வாய்ப்பு மக்களுக்கு இருக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

---

# நெற்பயிர் செய்கை குழு சமாஜம்

உடுப்பிட்டி, செவ்வாய்

வடமராட்சியில் நெற்பயிர் செய்யும் கமக்காரருக்கு விமோசனமளிப்பதற்காக வடமராட்சி நெற்பயிர்ச்செய்கைக் குழுக்களின் சமாஜமொன்றை நெல்லியடி ‘மகாத்மா’ தியேட்டரில் திரு. சி. மு. மார்க்கண்டு அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

திரு. க. உலகநாதர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மேற்படி சமாசத்தின் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. க. உலகநாதர், உப-தலைவர்: திரு. க. சிதம்பரப்பிள்ளை, காரியதரிசி: திரு. சி. மு. மார்க்கண்டு, உப காரியதரிசி: திரு. எஸ். பி. வீரவாகு, பொருளாளர்: திரு' இ. சுப்பிரமணியம், உபபொருளாளர்: திரு. ச. பொன்னுத்துரை. நிர்வாகசபை உறுப்பினர்களாக அ. கந்தையா ஐ. சின்னத்துரை, வ. பரம்சோதி, ம. வைத்திலிங்கம், வ. செல்லையா, க. முத்துக்குமாரு, க. தாமோதரம்பிள்ளை, கே. எஸ். வைரமுத்து, க. சரவணமுத்து ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

---

# ஆசிரியர் தற்காலிக வேலைநீக்கம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 18 வருடகாலம் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. மு. கார்த்திகேசன் வேலையிலிருந்து தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளார். தற்காலிக வேலைநீக்க அறிவித்தல் இம்மாதம் 18-ந் திகதி வழங்கப்பட்டது. இவர் மீதுள்ள குற்றச்சாட்டுக்கள் விரைவில் சமர்ப்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது

# பிறந்தகுழந்தை மூன்று தினங்களின் பின் மரணம்

## ஆஸ்பத்திரி ஊழியரின் கவனக்குறைவே காரணமாம்

யாழ்ப்பாணம், வியாழன்

சில்லாலையைச் சேர்ந்த திருமதி மேரி ரெஜின என்னும் பெண் மூன்று தினங்களுக்கு முன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் ஒரு ஆண் குழந்தையைப் பிரசவித்தார். நேற்றிரவு அந்தக் குழந்தைக்கு திடீரெனக் காய்ச்சல் ஏற்பட்டதாகவும் அச்சமயத்தில் அங்கு கடமையாற்றிக் கொண்டிருந்த மருத்துவத்தாதியிடம்,“ குழந்தைக்கு காய்ச்சல் அடிக்கிறது. கொஞ்சம் வந்து பாருங்கள்” என்று தெரிவிக்கப்பட்டதும் “இதுதான் ஒரு பிள்ளையோ” என்று அவர் பதிலளித்ததுடன் அதைப் பற்றி அக்கறையெடுக்கவுமில்லையாம். அதே சமயம் அங்கு கடமையிலுள்ள மற்றொரு தாதியிடம் “குழந்தைக்கு காய்ச்சல் கண்டிருப்பதால் டாக்டரிடம் அறிவியுங்கள்” என்று தெரிவிக்கப்பட்டதும் படுக்கையில் பாதி நித்திரையுடனிருந்தவாறே, “டாக்டருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது” என்று அவர் பதிலளித்தாராம்.

சிறிது நேரம் கழித்து அந்த வார்ட்டுக்கு கடமையினிமித்தம் வந்த டாக்டர், குழந்தையைப் பரிசோதித்து சிகிச்சை அளித்தும் காலதாமதமானதால் நேற்று அதிகாலை குழந்தை இறந்துவிட்டது.

இதே ஆஸ்பத்திரியில் ஒரு ஊழியராகக் கடமையாற்றுபவர் தான் இறந்த குழந்தையின் தந்தையாகும். இது பற்றி இப்பொழுது விசாரணை நடைபெறுவதாகத் தெரியவருகிறது.

# சிங்களவரிடையே மதத்துவேஷம் இருக்கக் கூடாது

பண்டாரவளை, புதன்

நாட்டின் அபாயகரமான பிரச்னை கத்தோலிக்க இயக்கம் அல்லவென்றும், சட்ட விரோதக் குடியேற்றமே நாட்டின் சுதந்திரத்தைஅச்சுறுத்தும் பிரச்னையாக வளர்ந்து வருவதாகவும் அம்பலாங்கொடை அத்ததாசி தேரோ இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் பேசினார். சிங்கள மக்கள் மத பாகுபாட்டை வளர்த்துக் சொள்ளாமல், சிங்கள இனம் என ஒன்றுபட்டு இந்தியர்கள் சட்டவிரோதமாக குடியேறுவதைத் தடைசெய்ய உதவ வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார். குறிப்பிட்ட கூட்டத்தில் அத்ததாசி தேரே மேலும் குறிப்பிட்டதாவது:

பௌத்த ஜாதிக பலவேகயா போன்ற இயக்கங்கள் நாட்டில் மதத்துவேஷத்தை வளர்த்து சிங்கள பௌத்தர்களுக்கிடையிலும், சிங்கள கத்தோலிக்கர்களுக்கிடையிலும் ஒரு கலவரத்தை உண்டுபண்ணும் பௌத்தர்களுக்கிடையிலும் கத்தோலிக்கர்களுக்கிடையிலும் ஒரு கலவரம் ஏற்படுமாயின் அது சரித்திரத்தில் நடந்திராத வகையில், 1958-ல் நடைபெற்ற இனக்கலவரத்தைவிட மிக மோசமானதாக இருக்கும். எனவே மனிதத்தன்மையின் பெயரிலும், சிங்கள இனத்தின் ஹோதாவிலும் மதத்துவேஷத்தை விதைக்க வேண்டாமென உண்மையான சிங்களவர்களை வேண்டிக் கொள்கிறேன். சிங்கள மக்கள் மததுவேஷத்தை நீக்கிக் கொண்டு ‘சிங்கள’ பலவேகயா என்ற கொடியின் கீழ் இணைந்து இந்தியர்கள் எங்களை கைப்பற்றுவதற்கு எதிராக போராடவேண்டும்.

இவ்விதம் மதவேறுபாடுகளை மறந்து சிங்களவர் என்ற தொனியில் ஒன்று படாவிடில் சிங்கள மக்களை இந்தியர்களின் சிரிப்புக்கிடமானவர்களாக இருக்கவேண்டிய காலம் மிகத்தூரத்தில் இருக்கமுடியாது. சட்டவிரோதமாகக் குடியேறும் இந்தியர்கள் பெரும்பான்மையினராவர்.

இதனுல் சிங்கள மக்கள் சிறுபான்மையினராகி சொந்த நாட்டிலேயே இந்தியரின் ஆதிக்கத்தின் கீழ் வாழவேண்டிய நிலை ஏற்படும்.

சிங்கள மக்களின் சோம்பல் தன்மையால் பெரும்பான்மையோர் சட்டவிரோதமாகக் குடியேறி வாழ்க்கை நடத்துகிறார்கள். அதே நேரத்தில் பல சிங்கள மக்கள் தங்கள் வாழ்க்கையை நடத்தமுடியாமல் தவிக்கின்றனர். சட்டவிரோதக் குடியேற்றத்தை தடுக்க மக்கள் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு நல்கவேண்டும். விசாகாலாவதியாகியும் இங்கு தங்கியிருப்பவர்களைப் பற்றி அரசாங்கத்திற்கு அறிவிக்கவேண்டும்.

# “சீன மக்கள் நேர்மையானவர்கள்”

கண்டி, புதன்

சீனவில் மக்கள் ஒரு நாளில் பன்னிரண்டு மணித்தியாலங்கள் வேலை செய்வதாகவும், தேச நலனுக்காக சந்தோஷத்துடன் வேலை செய்வதாகவும் மகாதேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லவா கடுகண்ணாவை நகரசபையின் ஆதரவில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்தார்.

இலங்கையரைப்போல அவர்கள் நேர்மையற்றவர்கள் அல்லவென்றும், தேசிய உணர்ச்சி அவர்களிடம் நிறைந்து காணப்படுவதாகவும், தேச உடைமைகளை சீன மக்கள் மிகப் பொறுப்புடன் பாதுகாத்து வருவதாகவும் தேசாதிபதி மேலும் தெரிவித்தார். இலங்கையில் ஒரு பொருள்வைப்பு நிலையத்தைக் காவல் செய்ய நாலு காவலாளிகள் தேவைப்படுகிறதென்றும் ஆனால் சீனவிலோ கதவுகளைத் திறந்துவிட்டால்கூட எவ்வித களவு நடைபெறுதெனவும் அவர் தெரிவித்தார்,

அரசாங்கத்தின் பணநிலை மோசமாக உள்ளதால் அபிவிருத்தி வேலைகளை குறைந்த அளவிலேயே செய்ய முடிகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

---

# விரிவுரையாளர் உண்ணுவிரதம்

கண்டி, புதன்

இலங்கைப் பல்கலைக்கழக பொருளாதாரப் பிரிவைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் எவ். ஆர். ஜயசூரியா தமது வாசஸ்தலத்தில் கடந்த திங்கட்கிழமை முதல் உண்ணுவிரதத்தை ஆரம்பித்திருக்கிறார்.

சென்றவாரம் கூடிய தெரிவுச்சபை பொருளாதாரப் பேராசிரியரைத் தெரிவுசெய்த விதம் ஒழுங்கீனமானது என அவர் கூறியிருக்கிறார். “எனவே இடையில் நிறுத்திய உண்ணுவிரதத்தை மீண்டும் ஆரம்பிப்பதைத் தவிர வேறு வழியில்லை” என்றும் அவர்கூறினார்.

டாக்டர் எச். ஏ. டி' எஸ். குணசேகராவை பொருளாதாரப் பேராசிரியராகச் சிபார்சு செய்வதென தெரிவுச்சபை பெரும்பான்மை வாக்குகளால் தீர்மானித்தது.

## ஆசிய நாடுகளுக்கு தேரோவின் வேண்டுகோள்

கொழும்பு, புதன்

இலங்கை பௌத்த அகடமியின் டைரக்டரான திரு. இந்துருவ பன்னதிச மகாநாயக்க தேரோ ஆசியாவைசேர்ந்த நாடுகளின் பிரதமர்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோள் ஒன்றில் ஆசிய பொதுச் சந்தை ஒன்றை மிக விரைவில் கூட்டுமாறு கேட்டுள்ளார்.

மனித இனத்துக்கு வேண்டிய பொருட்களுக்கு தேவையான மூலப் பொருட்கள் பெருமளவாக ஆசிய நாடுகளிலேயே காணப்படுவதாகவும், இத்தகைய ஆசிய நாடுகளை சில மேல்நாடுகள் சூறையாடி அவற்றை வங்குரோத்தாக்கி விடுவதாகவும் தேரோ தமது வேண்டுகோள் குறிப்பில் தெரிவித்துள்ளார். ஆசிய பொதுச் சந்தை ஒன்று நிறுவப்பட்டால் ஆசிய நாடுகளில் பொருளாதார நிலைமை சீர்மையடையும் எனவும், அதன்பின் மேல்நாடுகள் ஆசிய நாடுகளின் ஒத்துழைப்பை நாடிநிற்கும் எனவும் தேரோ குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா, பர்மா, தாய்லாந்து, பாகிஸ்தான், இந்தோனேஷியா, இலங்கை, நேபாளம் ஆகிய நாட்டுத் தலைவர்களுக்கு தேரோ தமது வேண்டுகோளை அனுப்பி வைத்துள்ளார். ஆசிய பொதுச் சந்தை ஸ்தாபிக்கப்படுவதின் அவசியத்தை வலியுறுத்தும் பொருட்டு இவர் இந்நாடுகளுக்கு விரைவில் விஜயம் செய்வார் எனவும் நம்பப்படுகிறது.

---

## சமய தீட்சை

யாழ்ப்பாணம், வியாழன்

வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் அகில இலங்கைப் பொது ஜன சேவைச் சங்கத்தால் ஒன்பது பேருக்கு இலவச சமய தீட்சை வழங்கப்பட்டது. பிரம்மஸ்ரீ இ. முத்தையா சேனாதிராஜக் குருக்கள் சமய தீட்சையை நடத்தினர்.

---

## வானொலிநிகழ்ச்சிகள்

### வியாழன் 30-1-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6 45 உதயகீதம். 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 சிறுவர்மலர், 5-45 திரை இசை.

இரவு 6-15 பாங்கு, 6-30 கிராமசஞ்சிகை, 6-45 கிளாரினெட், 7-00 பேச்சு—"காடும் நாமும்", 7-15 நேயர் விருப்பம், 7-45 நாடகம்—'ஒற்றைத் தும்மல்'—அல்வாயூர் கவிஞர் செல்லையா, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 கவிக்கோவை, 10-00 நிலைய ஒலிப்பதிவுகள்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15 பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-30 காந்தியைப் போற்றுவோமே — இசை நிகழ்ச்சி.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 திரைப்பட இசை, 1-30 வாத்தியஇசை, 1-50 குரலிசை, 2-10 உயர்தரப் பள்ளிகளுக்கு, 2-40 ஜெயபேரிகை.

மாலை 5-15 துதிப்பாடல்கள், 6-45 ஆகாஷ்வாணி ஒலிப்பதிவுகள்.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 தமிழ்நாட்டில் காந்தீயம்—பேச்சு, 7-45 ராகம், தானம், பல்லவி— ராமநாதபுரம் கிருஷ்ணன்—பாட்டு, 8-40 குரலிசை, 9-15 கபத்த சங்கீதம், 9-30 சர்வோதயம் பற்றிய சித்திரம், 10-00 தினசக்கதம்பம்.

---

ஆசிரியருக்குக் கடிதம்

## காணி கிடைக்குமா?

செட்டிகுளப் பகுதியைச் சேர்ந்த பல கிராமங்களில் வாழும் பொது மக்களில் எத்தனையோ குடும்பத்தினருக்கு ஒரு சிறிய துண்டாவது வயல் காணிகள் கிடையாது. வருடந்தோறும் நடத்தப்படும் காணிக்கச்சேரியின்போது வசதியுள்ள ஒரு சிலருக்குமட்டுமே காணிகள் கிடைத்துவிடுகின்றன. ஏழைகள் அதாவது 6, 7, 10 பிள்ளைகளை வைத்திருப்போருக்கும் காணிகள் இல்லை. காணிக்கு விண்ணப்பித்தாலும் காணிக்கச்சேரியின் போது இவர்களின் பெயர்கள் இடாப்பில் இடம் பெறுவதில்லை. இது ஏனோ என்பது தெரியவில்லை. நிலம் பெற்று வாழ உரிமையுடையவர்களும் நிலம் பெற்று வளமான வாழ்வு வாழ்வதற்கு இடமில்லை. இப்பகுதியில் எத்தனையோ ஆயிரக்கணக்கான நெல் விளையும் பூமிகள் காடாகக் காட்சியளிப்பது அரசினர்க்குத் தெரியாமலிருக்கவில்லை ஏழை மக்கள் ஏழையாகவே இருக்கவேண்டுமா? இவர்களின வாழ்வில் ஒளி வீசிப் புத்துயிர் பெற்று வயிறாரச் சாப்பிட்டு, விவசாயிகளாகத் திகழ்வதற்கு இனிமேலாவது சட்டத்தின், நீதியின் தேவதை இடமளிக்கும் என நம்புகிறோம். இப்புண்ணியமான மேலான சிறந்த பணியை இப்பகுதிக் காரியாதிகாரி செய்து முடிப்பார்களென்றே நம்புகிறோம். இப்பகுதியில் திக்கற்றவர்கள், பொருளாதாரமில்லாதோர்களைக் கவனித்து, காணி வழங்கி ஏழைத் தொழிலாளர்கள் விவசாயிகளாகி, செட்டிகுளப் பகுதியை வளம்கொழிக்கும் பகுதியாக்க முன் வரும்படி செட்டிகுளம் புதிய காரியாதிகாரியைக் கேட்டுக்கொள்ளுகிறோம்

வெ. பாலசுப்பிரமணியம்,
பொதுச் செயலாளன்
இ தொ. காங்கிரஸ்,
செட்டிகுளம்.

---

## பாம்பு கடித்து மரணம்

அக்கறைப்பற்று, புதன்

அக்கரைப்பற்றைச் சேர்ந்த கரடிக்குளம் என்னும் வட்டையில் ஜனாப் மீராலெவ்வை முகமது இஸ்மாயில் மரைக்கார் என்பவர் வாடியில் படுத்திருக்கும்போது விஷப் பாம்பொன்று அவரின் கையில் கடித்ததாகவும் சிறிது நேரத்தில் தனக்கு பாம்பு கடித்துவிட்டதென்று கூச்சலிடவே அவருடன் இருந்தவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு வரும் வழியில் அவர் காலமானர் என அக்கரைப்பற்றுப் பொலிஸைச் சேர்ந்த திரு. சந்திரதாஸை நடத்திய புலன்விசாரணையின் போது தெரியவந்தது.

# அக்கரைப்பற்றில் காணிக்கச்சேரி

அக்கரைப்பற்று, புதன்

கல்லோயாப் பள்ளத்தாக்கின் வலதுபுறப் பிரதேசத்தில் குடியேற்றக் கிராமங்களுக்கு விவசாயிகளைத் தெரிவுசெய்வதற்கான காணிக் கச்சேரி சபையின் பொது முகாமையாளரால் அக்கரைப்பற்றுக் கிராமாந்தரக்கோர்ட் மண்டபத்தில் பெப்ரவரி மாதம் 28, 29-ந் திகதியிலும் மார்ச் மாதம் 2-ம் 3-ம் தேதிகளிலும் நடைபெறவிருக்கிறது. இதற்கான விண்ணப்பப்பத்திரங்கள் 7-2-64-ந் திகதிக்கு முன்னர் அம்பாரையிலுள்ள கல்லோயா அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளருக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்

விண்ணப்பம்செய்யும் விவசாயியின் பெயரிலோ மனைவியின் பெயரிலோ எந்தவிதமான காணியில்லாதவராகவும், விவசாயம் செய்வதில் ஆர்வமுள்ளவராகவுமுள்ள விவாகமானவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

நடைபெறவிருக்கும் காணிக்கச்சேரியினால் விவசாயம் செய்வதற்குக் காணியில்லாது மானவாரிக் காணியுடன் கஷ்டப்பட்டுக்கொண்டுவந்த விவசாயிகளுக்கு இத்தக் காணிக்கச்சேரி நல்ல பலனை அளிக்கும். தெரிவு செய்யப்படும் குடியேற்ற விவசாயிக்கு நீர்ப்பாசன வசதியுடைய மூன்று ஏக்கர் காணி வழங்கப்படும்.

---

## 60 ஆசிரியர்கள் இடமாற்றப்படுவர்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணப் பகுதிகளிலிருந்து 60 தமிழாசிரியர்கள் விரைவில் தென்னிலங்கையிலுள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படவிருப்பதாக அறியப்படுகிறது. இதற்கான ஒழுங்குகள் நடைபெற்றுவருவதாகவும் விவாகமாகாத ஆசிரியர்களே அனுப்பப்படுவார்களெனவும் தெரியவருகிறது.

---

## வள்ளுவர் விழா

யாழ்ப்பாணம், வியாழன்

கரவெட்டி வள்ளுவர் மன்ற ஆதரவில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வள்ளுவர் விழா நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. உடுப்பிட்டி எம். பி. திரு மு. சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் பலர் சொற்பொழிவாற்றுவதுடன் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## தேநீர் வைத்து குடித்த சிறுவன் ஆஸ்பத்திரியில் மரணம்

அக்கரைப்பற்று, புதன்

பொத்துவில் இரண்டாம் குறிச்சியைச் சேர்ந்த ஜனாப் முகம்மது இஸ்மாயில் முகம்மது அபுறுகீம் என்னும் 15 வயது நிரம்பிய வாலிபன் தனது தந்தையின் வயலில் வேலை செய்துகொண்டு வயலிலுள்ள வாடியிலே இருந்தாராம். வெள்ளிக்கிழமை வாடிக்குப் பக்கத்திலுள்ள நீர் ஓடையில் வழக்கம் போல் தண்ணீர் எடுத்து தேநீர் வைத்துக் குடித்தாராம். தேநீர் குடித்துச் சிறிது நேரத்தால் மயக்கமுற்று உணர்விழந்தநிலையில் இருக்கவே பெற்றோர் ஆச்சரியமடைந்து உடனடியாக அக்கரைப்பற்று ஆஸ்பத்திரியில் அனுமதித்தார்கள். அனுமதித்ததும் சிறுவன் ஆஸ்பத்திரியில் காலமானர். சிறுவன் தண்ணீர் எடுத்த இடத்தில் நெல் வயலுக்கு கிருமிநாசினி அடிக்கப்பட்ட இயந்திரசாதனங்களை சுத்தப்படுத்தியதாகவும் மரணவிசாரணையின் போது தெரியவந்தது. அந்த இடத்திலுள்ள தண்ணீரில் சிறுவன் தேநீர் வைத்துக்குடித்ததினலே மரணமானர் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

---

## மீன்பிடித் துறைகள்

அக்கரைப்பற்று, புதன்

கிழக்குப் பிரதேசத்தில் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்யும் முகமாக மீன் பிடி இலாகா இரு மீன்பிடித் துறைமுகங்களை அமைப்பதற்கான ஆராய்ச்சி வேலைகளில் ஈடுபட்டுள்ளது. பெரும்பாலும் இந்த வருட இறுதிக்குள்ளே துறைமுகங்கள் அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஒரு துறைமுகம் பொத்துவில் தொகுதியைச் சேர்ந்த செங்கடுத்தகுடா என்னும் இடத்திலும் மற்றது கற்குடாத் தொகுதியைச் சேர்ந்த பெத்தலாய் என்னுமிடத்திலும் அமைக்கப்படவிருக்கிறது.

---

## தென்னக்கூன் உடல்நிலை முன்னேற்றம்

கொழும்பு, புதன்

உண்ணாவிரதமிருந்த திரு. முதியான்சே தென்னக்கூனின் உடல்நிலை துரிதமாக அபிவிருத்தியடைந்து வருகிறதென அவருக்குச் சிகிச்சையளிக்கும் டாக்டர் தியடோர் கூறினர்.


## விற்பனைக்கு

தீவுப்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச லொறியில் பாவனையிலிருந்த நல்லமுறையிலிருக்கும் 4 "யொக்ககாமா" டயர்கள் இலக்கம் 750 x 20, விற்பனைக்கு இருக்கின்றன. தேவையானோர் கேள்விப்பத்திரமூலம் 15-2-64 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

(தலைமைக்கந்தோரில் வேலை நேரங்களில் டயர்களைப் பார்வையிடலாம்)

க. பேரம்பலம்,
காரியதரிசி.
1778

விளம்பரம்

A limited stock of Morris Minor Tyres 500/14 received. Available at LIST price with us T. N. Lingam & Son, Motor Dealers, Sivan-kovilady, Jaffna. Phone : 408.
1914

### தேவை

சீயாக்காய்பவுடர், ஊதுபத்தி தயாரிப்பதற்கு பெண் பிள்ளைகள் தேவை. தேவன்ஸ் (ராஜா ஸ்டோர் அருகில்) 3|4 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். 1913

அச்சக வேலைகளை மேற்பார்வை பார்க்கக்கூடிய திறமையும், பொறுப்பும் வாய்ந்த லிகிதர் (Clerk) தேவை. ஆண், பெண் ஆகிய இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். நாஷனல் அச்சகம், ராஜா பில்டிங், யாழ்ப்பாணம். 1918

### அச்சக வேலைப் பயிற்சி

யாழ் நகரில் முதன் முதலாக எமது ஸ்தாபனம் வேலையற்றவர்களுக்கு அச்சக சம்பந்தப்பட்ட எல்லாவித வேலைகளுக்கும் பயிற்சி அளித்துவருகின்றது. அனுபவசாலியாகி நல்ல ஊதியத்தை அடைய அரிய சந்தர்ப்பம். சேர விரும்புவோர் உடனே விண்ணப்பிக்கவும்:- நாஷனல் அச்சகம், ராஜா பில்டிங், யாழ்ப்பாணம். 1917

### தொய்வு, நீரிழிவு

[illegible] 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50. வைத்தியர் பரிபூரணம் கைலாயபிள்ளையார் கோவில் [illegible] யாழ்ப்பாணம்

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

ராயல் நீல வர்ணமுடைய

சுப்பர் குயிங்க

கண் இமைப்பதற்குள் கழுவக்கூடிய தன்மைவாய்ந்தது




இதமாக எழுதக்கூடிய மையைக் கேட்டு வாங்குங்கள். இந்த மையில் 'சொல்வ் எக்ஸ்' இருப்பதால் எழுதும் போதே அது பேனவைச் சுத்தம் செய்கிறது. கழுவக்கூடிய ராயல் நீலத்திலும் மற்றும் ஆறு வெவ்வேறு நிரந்தர வர்ணங்களிலும் கிடைக்கும்.



பார்க்கர் பேனா ஸ்தாபனத்தின் ஒரு உற்பத்தி

# சிங்கள ஊழியர் வெளிநடப்பு துரதிர்ஷ்டவசமானது

## யாழ் எழுதுவினைஞர் சங்க கிளை அறிவிப்பு

யாழ்ப்பாணம், புதன்

"யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும், மற்றும் அரசாங்க அலுவலகத் தலைவர்களும் பொதுமக்களுடன் ஏற்படுத்திக்கொள்ளும் தொடர்பு களை உத்தியோக மொழியில் மாத்திரமல்லாது அவரவர்கள் தொடர்புகொள்ளும் மொழியிலேயும் வைத்துக்கொள்ள முன்வந்திருக்கும் இவ்வேளையில் யாழ்ப்பாணம் சுகாதார அத்தியட்சகர் அலுவலகத்தில் கடமையாற்றும் சிங்கள ஊழியர்கள் வெளிநடப்பதாகிய சம்பவத்தை உருவாக்கியுள்ளது மிகவும் துரதிர்ஷ்டவசமானது."

இவ்வாறு அரசாங்க தமிழ் எழுதுவினைஞர் சங்க யாழ்ப்பாணக் கிளையின் காரியதரிசி செளக்கிய சேவை அதிபருக்கு யாழ்ப்பாணம் சுகாதார அத்தியட்சகரின் அலுவலகத்தில் கடமையாற்றும் சிங்கள லிகிதர்களின் வெளிநடப்புப் பற்றி எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:—

சமாதானமான முறையில், அவர்களுடைய தொழிற்சங்கம் மூலம் தமக்குள்ள குறைபாடுகளையும் எடுத்துக்காட்டி, தமது கோரிக்கைகளையும் சமர்ப்பிப்பதை விடுத்து, உத்தியோக மொழி அமுலை யாழ்ப்பாணத்தில் எதிர்ப்பதற்கான சூழ்நிலை உருவாகியிருக்கும் அரசியல் காலநிலையில் இந்த லிகிதர்கள் எடுத்துள்ள நடவடிக்கை பொருட்டு தான் விளைவுகளை ஏற்படுத்துவதாகும்

ராஜ்ய லிபிகாரு சங்கமயாவின் அங்கத்தவர்களாகிய இந்த குமாஸ்தாக்களின் நடவடிக்கை அந்த அலுவலகத்தில் கடமையாற்றும் தமிழ் அரசாங்க எழுதுவினைஞர் சங்க உறுப்பினர்களுக்கு இடமாற்றம் முதலிய கஷ்டங்களை, ராஜ்ய லிபிகாரு சங்கமயாவை திருப்திப்படுத்தும் வகையில், கொடுக்கக்கூடுமென அஞ்சுகின்றோம்

குறிப்பிட்ட நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் உண்மைக்கு மாறான வகையில் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபருக்கும் பொலிஸ் நிலையத்திலும் தாம் துன்புறுத்துவதாகவும் அதனால் வேலை செய்ய முடியவில்லையென்றும் முறைப்பாடுகள் கொடுத்துள்ளனர். இவ்வித நிலை அவர்களின் கற்பனையில் உள்ளதே ஒழிய உண்மையில் ஒன்றுமேயில்லை.

யாழ்ப்பாண சுகாதார அத்தியட்சகர் அலுவலகத்திலுள்ள ஒரு சிரேஷ்ட தமிழ் அரசாங்க ஊழியர் அங்கு கடமையாற்ற இடையூறுகவிருப்பதாகவும் அவரை இடமாற்றம் செய்யவேண்டுமென்றும் ராஜ்ய லிப்பிககாருசங்கமயா முன் ஒரு முறை கோரியதை இச்சந்தர்ப்பத்தில் எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

பொதுசனங்களின் நன்மையை நோக்கி இங்கு எழுந்துள்ள நிலையை சீர்படுத்தும்படி வேண்டுவதுடன் இந்நிலைக்கு எவ்விதத்திலேனும் எமது சங்க அங்கத்தவர்கள் பொறுப்பாக இருக்கவில்லையென்பதையும் தெரியப்படுத்துகிறோம். எமது அங்கத்தவர்கள் எவ்வகையிலும் பாதிக்கப்படாத வகையில் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று வற்புறுத்திக் கோருகிறோம்.

## பிரசாரக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், புதன்

உத்தியோக மொழித் திணிப்பை எதிர்த்து நடத்த உத்தேசித்துள்ள நேரடி நடவடிக்கை பற்றி வடக்கு கிழக்கு மாகாணங்களில் உடனடியாக மீண்டும் பிரசாரக் கூட்டங்களை ஆரம்பிப்பதற்குத் தமிழரசுக்கட்சி தீர்மானித்துள்ளது.

## மாநகரசபை குழுத் தலைவர்கள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மாநகரசபையின சுகாதாரக் குழுத் தலைவராக திரு. என். டி. செல்லத்துரையும், மின்சாரக் குழுத் தலைவராக திரு. என். அந்தோனியும், மராமத்துக் குழுத் தலைவராக திரு. ஏ. துரைராஜசிங்கமும் தெரிவுசெய்யப் பெற்றுள்ளனர்.

## 'தாய்மொழியில் தொடர்பு கொள்க'

கொழும்பு, செவ்வாய்

அரசாங்க எழுதுவினைஞர் சங்க ஆதரவில் சென்ற சனிக்கிழமை திரு. கோடீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கலாநிதி வ. கணேசலிங்கம் பேசுகையில் குறிப்பிடடதாவது: "சட்டரீதியாக இவ்வருடம் முதலாம் திகதியிலிருந்து சிங்களமே அமுலுக்கு வந்திருக்கிறது. அரசாங்கத்தோடு நாம் செய்யும் சகல தொடர்புகளையும் தமிழ் மொழியிலேயே செய்யவேண்டும். விடுமுறைக்காக அனுப்பும் விண்ணப்பப் பத்திரங்கள், வைத்திய அத்தாட்சிப்பத்திரங்கள் ஆகியவற்றை தமிழிலே அனுப்பவேண்டும். இம்மாதம் அனேகமாக எல்லா அலுவலகங்களிலும் சிங்களத்திலேயே சம்பளப்பட்டியலைத் தயாரிக்கிறார்கள். சிங்களத்தில் மட்டுமே சம்பளப் பட்டியல் இருந்தால் தமிழ் ஊழியர்கள் சம்பளம் எடுக்காமல் இருப்பது போற்றத்தக்கது. அவ்வாறு செய்ய முடியாதவர்கள் தமது பெயரை ஆங்கிலத்திலோ அல்லது தமிழிலோ எழுதித் தமது சம்பளத்தை எடுக்கடவண்டும்" என்று குறிப்பிட்டார்.

## பாரத - பாக் எல்லைச் சம்பவம்

புதுடில்லி, ஜன. 28

ஆசாமில் பாரத – கிழக்குப் பாகிஸ்தான் எல்லையில் பாகிஸ்தானைச் சேர்ந்த இராணுவத்தினர் பதுங்கியிருந்து சுட்டத்தினால் பாரதத்தைச் சேர்ந்த இரு ராணுவ வீரர்கள் காயமுற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'கடும் தண்டனை அளிக்கவும்'

புதுடில்லி, ஜன. 28

ஸ்ரீநகரிலிருந்து புனிதச்சின்னம அகற்றப்பட்டதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு கடும் தண்டனை அளிக்கப்படடவேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சின மத்திய கமிட்டி கோரிக்கை விடுத்துள்ளது.

## படைக் குறைப்புக்கு ரஷ்யாவின் கோரிக்கை

ஜெனிவா, ஜன. 28

அணு ஆயுதங்களைத் தாங்கிச் செல்லும் விமானங்கள் எல்லாவற்றையும் அழித்துவிடவேண்டுமென்று இங்கு நடைபெற்றுவரும் ஆயுதப்பரிகரண மகாநாட்டில் ரஷ்யப் பிரதிநிதி திரு. ஸராப்கின் தெரிவித்துள்ளார்.

படைக் குறைப்புக்கான 9 அம்சத் திட்டத்தையும் இன்று சோவியத் பிரதிநிதி மகாநாட்டில் சமர்ப்பித்தார்.

## ரொபர்ட் கென்னடி அச்சம்

வாஷிங்கடன், ஜன. 28

இந்தோனேஷியாவுக்கும் மலேசியாவுக்கு மிடையில் நடைபெறவிருக்கும் உத்தேச சமரச பேச்சுவார்த்தைகள் முறிவுற்றால் தென் கிழக்காசியாவில் பெரும் யுத்தம் தோன்றும் என மலேசியத் தகராறுக்கு சமாதானமாகத் தீர்வு காணும் முயற்சியில் இந்தோனிசியா பிலிப்பைன்ஸ், மலேசிய ஆகிய நாடுகளுக்கு அமெரிக்க ஜனாதிபதியின் விசேஷ தூதராகச் சென்று திரும்பியுள்ள திரு ரொபர்ட் கென்னடி இங்கு தெரிவித்துள்ளார்.

## தமிழ் மாணவர் மன்றம்

### சமூக நலனுக்கு உழைக்கும்

கொழும்பு, புதன்

கொழும்பு பல்கலைக்கழகத்திலுள்ள தமிழ்பேசும் மாணவர்களில் சிலரும், கொழும்பு நகரின் ஏனைய கல்லூரிகளில் உள்ள மாணவர்களில் சிலரும் ஒன்றுபட்டு மாணவர் மன்றம் என்ற பெயரில் ஒரு இயக்கத்தை அண்மையில் நிறுவியுள்ளனர். இந்த இயக்கத்தின் முக்கிய குறிக்கோள் இன்றைய தமிழ்பேசும் மாணவர்களின் எதிர்கால நிலைபற்றியதாகும். தமிழ் மாணவர்களுடைய கல்வி, இதர முன்னேற்றத்துக்காக உழைத்தல் இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகவிருக்குமென அறியப்படுகிறது.

தமிழ் மாணவர்களின் அரசியல் அறிவைப் பெருக்க உதவுதல், அபிவிருத்தி குன்றிய பிரதேசங்களில் உள்ள தமிழ் மாணவர்களுக்கு உதவுதல் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள சமூக ஏற்றத்தாழ்வுகளை அகற்றுதல் ஆகிய பிரதான கொள்கைகளுக்காக இவர்கள் உழைப்பார்களெனத் தெரியவருகிறது. தமிழ்மக்கள் தமது உரிமை பெற்று வாழவும் ஒரு சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்கவும் இந்த இயக்கம் நோக்கம்கொண்டுள்ளதாக அறியப்படுகிறது.

இந்த இயக்கத்தின் காப்பாளராக திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இந்த இயக்கத்தைச் சேர்ந்த அங்கத்தவர்கள் பேராதனைக்கும் மற்றும் இடங்களுக்கும் சென்று அங்கு கிளைகளை நிறுவ உத்தேசித்துள்ளனர்.

## 'பொலிஸி'யை திருப்பி அனுப்பினர்

யாழ்ப்பாணம், புதன்

இலங்கை காப்புறுதிக் கூட்டு ஸ்தாபனத்தில் 'பொலிஸி'தாரராகச் சேர்ந்தவர்களுக்கு இப்பொழுது பொலிஸிகள் யாவும் சிங்களத்திலேயே அனுப்பப்பட்டுவருவதாகவும், நீர்வேலியைச் சேர்ந்த திரு. கணேசலிங்கம் என்பவர் தமக்குச் சிங்களத்தில் வந்த பொலிஸியைத் திருப்பி அனுப்பிவிட்டதாகவும் அறியபபடுகிறது.

## 'காஸ்டிக் சோடா' நிரம்பி வழிந்தது

பரந்தன், புதன்

பரந்தன் ரசாயனத்தொழிற்சாலையில் 800 கலன் 'காஸ்டிக் சோடா' நிரம்பி வழிந்து வீணாகிவிட்டதாகவும் இதுசம்பந்தமாக இரண்டு ஊழியர் வேலையிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிப்படுகிறது.

## வள்ளுவர்விழா கொண்டாட முடிவு

உடுப்பிட்டி, செவ்வாய்

கரவை வள்ளுவர் மன்றத்தினர் அடுத்த மாதம் 2-ந் திகதி வள்ளுவர்விழாவைக் கொண்டாடவிருக்கின்றனர்.

இந்த விழா உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறவிருப்பதாகத் தெரிகிறது. பல பிரபல பேச்சாளர்கள் விழாவில் கலந்துகொள்ளவிருக்கிறார்கள்.

## விலைவாசி உயர்வு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், புதன்

விலைவாசி உயர்வு எதிர்ப்பு ஆர்ப்பாட்டஊர்வல மொன்றை சனிக்கிழமை காலை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர்சங்க யாழ்ப்பாணக்கிளை ஒழுங்கு செய்துள்ளது.

காலை பத்து மணிக்கு சிறும்பியடிச் சந்தியிலிருந்து ஆரம்பமாகும். இந்த ஊர்வலம் கச்சேரிக்குச் சென்று அரசாங்க அதிபரிடம் ஒரு மகஜரைச் சமர்ப்பிக்கும்.

## இந்தியா முன்னேற்றம்

புதுடில்லி, ஜன. 28

1962 - 63க்கான கொழும்புத் திட்ட சர்வேயின்படி இந்தியா கைத்தொழில் துறையிலும் பொருளாதார வளர்ச்சியிலும் கணிசமான அளவு முன்னேற்றம் கண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'தொழிலாளர் நிலை அறிய கமிஷன் நியமிக்குக'

கொழும்பு, புதன்

நாடு முழுவதும் ஸதலஸ்தாபன வீட்டுத்திட்ட லயன்களில் குடியிருக்கும் தொழிலாளர்களின் பொருளாதாரம், கல்வி, சமுதாய அந்தஸ்து ஆகியன பற்றி உண்மை நிலையை அறிய விசாரணைக் கமிஷனொன்றை நியமித்து அவர்களின் வாழ்வுக்கான சீர்திருத்தங்களை அமுல்நடத்துமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் பிரேரணையொன்று அகில இலங்கை அருந்ததியர் சங்கம் (தமிழர்) சங்கம், ஐக்கிய இலங்கை ஸதலஸதாபன தொழிலாளர் சங்கம் ஆகிய சங்கங்களின் இணைப்புப் பொதுக் கூட்டத்தில் கொண்டுவரப்படவிருக்கிறது.

அரசாங்க, ஸ்தலஸதாபனத் தொழிலாளர்களில் கணிசமான அளவு இந்திய வம்சாவளியினராதலால் இலங்கை-இந்திய பிரச்சினை அரசாங்க ரீதியில் தீர்க்கப்படும்வரை இவர்களின் தொழில் பாதுகாப்புக்கும், வாழ்வுரிமைகட்கும் அரசியல் சட்டங்கள் மூலம் தடைவிதிக்கவேண்டாமென அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் பிரேரணையும் இன்னும் பல பிரேரணைகளும் கூட்டத்தில் கொண்டுவரப்படவிருக்கின்றன.

கொழும்புநாராயணகுருமண்டபத்திலமேற்படி கூட்டம்நடைபெறும்.

## வாராந்த நிகழ்ச்சிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், வியாழன்

வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் சென்ற வெள்ளிக்கிழமை மாலை 5-30 மணிக்கு நல்லூர்ப் பஜனைச் சபையின் வாராந்த நிகழ்ச்சிகள் அதன் தலைவர் திரு இ. கந்தசுவாமியால் ஆரம்பித்து வைககப்பட்டது.


இன்று முதல்

**சினிமாஸ் திரைகளில்**

மகத்தான ஆரம்பம்

எஸ். எஸ். ராஜேந்திரன் — பத்மினி

நடித்த

**காட்டு ரோஜா**

இப்பொழுது திரையிடப்படுகிறது!

ராஜ் (நீர்கொழும்பு) குயின்லன்ட் (நுகேகொடை) விஜயா (அம்பாறை) வெம்பிளி (கண்டி)

வியப்பு, திகைப்பு, விறுவிறுப்பு, வெள்ளமெனத் துள்ளிவரும் இசையமைப்பு!

உங்களை மகிழ்விக்கும் அற்புதப் படைப்பு!
உணர்ச்சிக் கோர்வையிலே உருவான
உன்னத குடும்பச் சித்திரம்!!

எம். ஜி. ராமச்சந்திரன் - பி. சரோஜா தேவி
எஸ். வி. சுப்பையா - எம். என். நம்பியார்
எம். வி. ராஜம்மா - நாகேஷ்- அசோகன்

மற்றும் பலர் திறம்பட நடித்த

சரவணா பிலிம்ஸ்

**பணத் தோட்டம்**

தயாரிப்பு ஜி. என். வேலுமணி — டைரக்ஷன் கே. சங்கர்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) — ராஜ்கபூர் — பத்மினி நடித்த ஜிஸ் தேஷ் மென் கங்கா பேதிஹை

மனோகரா (யாழ்ப்பாணம்) — ரங்கராவ்—பானுமதி நடித்த அன்னை


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.